திரு. என். கிட்டப்பா: தலைவர் அவர்களே, 'சுதை வேலை' செய்யும் கலையே தமிழ்நாட்டில் அழிந்துவிடும் நிலை இருப்பதாகத் தெரிகிறது. ஆகவே, அதில் பயிற்சி அளிப்பதற்காக பயிற்சிப் பள்ளி ஒன்றை நிறுவி, பயிற்சி அளித்து, பயிற்சிபெற்றவர்களுக்கு அறநிலையத் துறையின் மூலமாக அவர்களை வேலைக்கு அமர்த்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவர் அவர்களே, தற்போது மகாபலிபுரத்தில் தொழில்துறை மூலமாக 'சுதை வேலை' பயிற்சி நடத்தப்பட்டு வருகிறது. ஆகவே, அறநிலையத் துறை மூலமாக தனியாக பயிற்சிப் பள்ளியை ஆரம்பிக்கும் எண்ணம் அரசுக்கு இல்லை.

திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, வடபழனி ராஜ கோபுரம் கான்கிரீட் மூலமாக அமைக்கப்படுவது அரசுக்குத் தெரியுமா? அப்படி அமைப்பதால் பழைய கலைச் சிறப்புக்கள் கெட்டுப் போய்விடாதா?

மாண்புமிகு திரு. கண்ணப்பன்: தலைவர் அவர்களே, அது அரசுக்குத் தெரியும். அதனால் எந்தவிதமான பழைய நிலைமைகளும் கெட்டுவிடாது.

மதுரையில் கிராம தான இயக்கம்

***393 வினா—திரு. பி. எஸ். மணியன்**: மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தற்போது மதுரை மாவட்டத்தில் கிராம தானத்தின் கீழ் எத்தனை கிராமங்கள் தானமாகக் கொடுக்கப்பட்டுள்ளன?

மாண்புமிகு திரு மு. கண்ணப்பன்: 18 கிராமங்கள்.

திரு. கே. டி. கே. தங்கமணி: தலைவர் அவர்களே, மதுரை மாவட்டத்தில் கிராமதானத்திற்குக் கொடுக்கப்பட்ட கிராமங்கள் சரியான முறையில் பரிபாலிக்கப்பட முடியவில்லையென்று கிராமதான ஊழியர்களே தகவல் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, அரசு இதைக் கவனித்து, இது எந்தத் திசையில் போகவேண்டுமென்று அரசு வழிகாட்டி, உதவி செய்யுமா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட புகார்கள் அரசாங்கத்திற்கு நேரடியாக எதுவும் வரவில்லை. அந்தப் பதினெட்டு கிராமங்களுக்கும் மத்திய, மாநில அரசுகளிலிருந்து 1968-69-ம் ஆண்டில் விவசாய அபிவிருத்திக்காக 64,105 ரூபாய் கடனாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. 1969-70-ம் ஆண்டில் 74,500 ரூபாய் கடனாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. விவசாயத் துறையில் புதிய கிணறுகள் வெட்டுதல், மின்சார பம்பு

1971 டிசம்பர் 14]

செட் அமைத்தல், உழவு மாடுகள் வாங்குதல் போன்ற காரியங்களுக்கு அந்தப் பகுதியிலுள்ள விவசாய மக்களால் இத்தொகை செலவிடப்படுகிறது.

திரு. அ. ப. சண்முகசுந்தரம்: தலைவர் அவர்களே, 18 கிராமங்கள் கிராமதானமாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதில் எத்தனை ஏக்கர் நிலம் தானமாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. நிலமில்லாத எத்தனை விவசாயிகளுக்கு நிலம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அவர்களுக்கு அளிக்கப்படும் நிதி உதவிகள் சரியாகச் செயல் பட்டிருக்கிறதா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவர் அவர்களே, பதினெட்டு கிராமங்கள் கொடுக்கப்பட்டிருக்கிறது. நிலத்தின் மொத்தப் பரப்பளவு 1,309.14 ஏக்கரும், அதன் மதிப்பு 17,23,613 ரூபாயும் ஆகும். இதற்கு வழங்கப்பட்ட கடன்கள் மாவட்ட ஆட்சித் தலைவரின் அனுமதியின்பேரில் ஊராட்சி ஒன்றியங்கள், ஊராட்சிகள் மூலமாக அந்த விவசாயிகளுக்குச் சேர்க்கப் படுகிறது.

திரு. ரா. ரா. முனுசாமி: தலைவர் அவர்களே, மதுரை மாவட்டத்திற்கு மட்டும் பதினெட்டு கிராமங்கள் கிராமதானமாகக் கொடுக்கப்பட்டது என்று சொன்னார்கள். அது எந்தெந்தக் கிராமங்கள்? மற்ற மாவட்டங்களில் கிராமதானத்திற்கு நிலம் வழங்கப்படவில்லையா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவர் அவர்களே, மதுரை மாவட்டத்தில் மேலூர், உசிலம்பட்டி, நிலக்கோட்டை ஆகிய வட்டங்களில் 18 கிராமங்கள் கிராமதானமாகக் கொடுக்கப் பட்டிருக்கின்றன. மற்ற மாவட்டங்களைப் பொறுத்த விவரம் தேவையானல், தனிக் கேள்வி போடவும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினுக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) வெள்ளிக்குறி இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப் பட்டது என்பதைக் குறிக்கும்.]

(2) அறிவிப்பு

(அ) தமிழ்நாடு 1971-ம் ஆண்டு சம்பளம் வழங்குதல் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 38/1971).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு 1971-ம் ஆண்டு சம்பளம் வழங்குதல் (திருத்த) சட்ட முன்வடிவை (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 38/1971) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்திருக்கிறார்கள்.